5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு *பேரவைத் தலைவர்:* மாலை நிகழ்ச்சிகள் இப்போது தொடர்கின்றன.

அரசினர் சட்டமுன்வடிவுகள், அறிமுகம் செய்தல். 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு *திரு. கு.ப. கிருஷ்ணன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு *பேரவைத் தலைவர் :* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு *திரு. கு.ப. கிருஷ்ணன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்), சட்டமுன்வடிவு 1995

மாண்புமிகு *பேரவைத் தலைவர்:* பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.